கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றறிக்கை 02/2015.

எனது இல:- NP/10/03/COM/CIR/2015.

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு,

வடமாகாணம்.

2015.02.27.

தலைவர்,

வடமாகாணத்தில் உள்ள அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்கள், சமாசங்கள்.

## கூட்டுறவு ஊழியர்களுக்கான சம்பள உயர்ச்சி.

வடமாகாணத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் 2015.01.01 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 30% சம்பள உயர்ச்சியை வழங்க வேண்டும் என வடமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. இச்சம்பள உயர்வை வழங்குவதற்கான இருவகை கணிப்பீட்டு முறைகள் கீழே தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்தின் நெறியாளர் குழுவும் இவ்விரு கணிப்பீடுகளில் எதனைத் தேர்ந்து கொள்வது என்பது பற்றி ஆராய்ந்து தீர்மானம் எடுத்தபின் தமது தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என வேண்டப்படுகின்றீர்கள்.

கணிப்பீடு-01

2007.01.01 இல் வழங்கப்பட்ட சம்பள மாற்றப்படியான சம்பளத்துடன் 10% அதிகரிப்பைக் கூட்டிய தொகையை அடிப்படைச் சம்பளமாகக் கொண்டு அதன் 30% அதிகரிப்பை வழங்குதல்.

கணிப்பீடு-02

2014.12.31இல் ஒவ்வொரு பணியாளரும் பெற்ற எல்லாவகைச் சம்பள ஏற்றங்களையும் உள்ளடக்கியதான சம்பளத் தொகையின் 30% அதிகரிப்பை வழங்குதல்.

மேற்குறித்த கணிப்பீட்டில் எது பொருத்தமானது என்பதைச் சங்கத்தின் நிதி நிலையைக் கருத்திற் கொண்டு தீர்மானிக்குமாறு வேண்டப்படுகிறீர்கள்.

இச்சுற்று நிருபம் 2015.02.26ஆம் திகதியன்று நடைபெற்ற ஆணைக்குழுவின் கூட்டத் தீர்மானப்படியும் வடமாகாண சபையின் கூட்டுறவு விடயப் பொறுப்புடைய அமைச்சர் கௌரவ பொ.ஐங்கரநேசன் அவர்களது அங்கீகாரத்துடனும் வெளியிடப்படுகிறது.

க.பிரபா,

செயலாளர்.

Ms.K.PRABHA
Secretary
Co-operative Employees Commission
Northern Province

பிரதி:-

1. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும், வடமாகாணம்.
2. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் / கிளிநொச்சி/ முல்லைத்தீவ/வவனியா/ மன்னார்.

## சம்பளக் கணிப்பீடு தொடர்பான உதாரணம்:-

கணிப்பீடு-01

ஒரு பணியாளர் 2007 01.01இல் சம்பள மாற்றத்தின் போது

| | |
|---|---|
| பெற்ற சம்பளம் | ரூ 12550.00 |
| 10% அதிகரிப்பு | ரூ 1255.00 |
| இவரது அடிப்படைச் சம்பளம் | ரூ 13805.00 |
| இதன் 30% | ரூ 4141.50 |
| புதிய சம்பளம் | ரூ 17946.50 |

இப்பணியாளர் ஏனைய படியேற்றங்களையும் பெற்று 2014.02.31இல் ரூபா 21358.50ஐப் பெற்று வருகிறார் எனின்

சங்கம் இரண்டாவது கணிப்பீட்டைப் பின்பற்றும் முடிவை எடுத்திருப்பின் கணிப்பீடு வருமாறு:-

கணிப்பீடு-02

| | |
|---|---|
| சம்பளம் | ரூ 21358.50 |
| 30% அதிகரிப்பு | ரூ 6407.55 |
| புதிய சம்பளம் | ரூ 27766.05 |